**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.226/2024 - PW-9**

| | |
|---|---|
| Name | திருமதி.செல்வி |
| Husband/Father Name | அருண் |
| Village /Area | ராமாபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | 50 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 09.03.2026.

**(எதிரிகள் 1,2,4,5 ஆஜர். எதிரி 3 மற்றும் 6 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெமிலி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2024 அன்று இரவு 23.30 மணியளவில் நான் பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் சிரஞ்சீவிலு ஏற்கனவே நெமிலி காவல் நிலைய குற்ற எண்.45/2024 U/s.392 of IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்யதிருந்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் படி ஆய்வாளர் 03.02.2024 அன்று எதிரிகள் ஹரி பாபு த.பெ.ஆனந்தன், கருப்பு (எ) அசோக் த.பெ.நாகமணி, கௌதம் (எ) பிரவின்குமார் த.பெ.சுரேஷ் ஆகியோர்களை சம்பத்ராயன்பேட்டை கூட்டு சாலை வாகன தணிக்கையின் போது கைது செய்து விசாரணை செய்த போது அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் கொடுத்ததை காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல நான் மடிக்கணினியில் பதிவு செய்தேன். மேலும் 05.02.2024 அன்று சதீஷ்குமார் த/பெ. ஏழுமலை, மாரிமுத்து (எ) விக்ரம், தீபக்குமார் (எ) தீபக் த/பெ.ஜானகிராமன் ஆகியோர்களை பானாவரம் செல்லும் உள்ளியனூர் சந்திப்பு ரோட்டில் கைது செய்து விஜயகுமார் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை மடிக்கணினியில் பதிவு செய்தேன். வாக்குமூலங்கள் பதிவு செய்த பிறகு அதனை printout எடுத்து எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் ஆய்வாளர் கையொப்பம் பெற்றார். இந்த வழக்கில் சம்மந்தபட்ட அனைத்து ஆவணங்களையும் மடிக்கணினியில்

பதிவு செய்தேன். மேலும் ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை நான் மடிக்கணினியில் பதிவு செய்தேன். மேலும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றின் ஆவணங்களை மடிக்கணினியில் தட்டச்சு செய்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.09 19:20:29 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.